admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்







| Vol: 04 | Issue: 003 | 4 Pages | 03.08.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 003 | 4 பக்கங்கள் | 03.08.2026 | திங்கட்கிழமை | விலை ரூ. 6 | வருட சந்தா ரூ.1825 |



**இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு**

**விளக்கம்:** பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

# இடைத்தேர்தலுக்காக நான் வெறியோடு காத்து இருக்கிறேன் சீமான் ஆவேசம்

சென்னை, ஆக. 3

இடைத்தேர்தலுக்காக நான் வெறியோடு காத்து இருக்கிறேன் என சீமான் கூறியுள்ளார்.

நாம் தமிழர் கட்சியில் புதிதாக 1,000 பேர் இணையும் நிகழ்ச்சி, பல்லாவரத்தில்இன்றுநடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் நாதகவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டார். நிகழ்ச்சியில் சீமான் பேசியதாவது:

நடிகருக்கும் தலைவருக்கும் வித்தியாசம் தெரியாத தறுதலை கூட்டம், நடிகனிடம் ஆட்சியை கொடுத்துவிட்டார்கள். பிளாக்கில் டிக்கெட் விற்ற கூட்டம் எங்களை திரள்நிதி கூட்டம் என்கிறார்கள். திரள்நிதி திருடர்கள் என்கிறார்கள், இது மக்கள் இயக்கம்; மக்களிடம் இருந்துதானே பெறமுடியும், நீங்கள் வாக்குகளை மக்களிடம்தானே கேட்கிறீர்கள்; நாங்கள் வாக்குகளையும் கேட்கிறோம், வலிமையையும் கேட்கிறோம் திரள்நிதியில் ஒரு தேநீர்கூட அருந்தமாட்டோம்.

சீமான் பென்ஸ் கார் வாங்கிட்டார்னு சொல்றாங்க, என்னுடைய மாமா ஒருத்தர் கார் வாங்கி கொண்டு வந்து வீட்டு வாசலில் நிறுத்தி விட்டு சென்றார்.

தமிழகத்தில் இத்தனை தொகுதி இருக்கும்போது பெரம்பூரில் மதம், திருச்சி கிழக்கில் சாதி மதம் காரணங்களுக்காக போட்டியிட்டுவிட்ட ஜோசப் விஜயால், எப்படி சாதி மதத்தை ஒழிக்க முடியும்?

திமுக செய்த வெறும் விளம்பர அரசைத்தான், இவர்களும் செய்கிறார்கள். மக்கள் பணத்தை வீணடிக்க மாட்டோம் என்றவர்கள் பஸ் நிலையங்களில் விளம்பர



பதாகைவைத்துள்ளார்கள்.இவ்வளவு கோடிகளை செலவழித்து எதுக்கு தெருத்தெருவாய் விளம்பரம். விளம்பர அரசுதான்.. ஒன்லி ரீஸ்தான் தினமும் நடந்து கொண்டிருக்கிறது.

6 மணி நேரம் தான் தமிழ்நாட்டில் மின்சாரம் இருக்கிறது. ஆனால் அதற்கு இவ்வளவு மின் கட்டணம் வந்துள்ளது. இன்னும் 6 மாதம் கழித்து யாரும் தமிழக வெற்றி கழகத்திற்கு ஓட்டுபோடுவோம்என்றுசொல்ல மாட்டார்கள். மீன்பிடிக்கு சென்று 850 பேர் சுட்டு கொல்லப்பட்டுள்ளனர். அவர்களது குடும்பத்துக்கு ஏதாவது நிதியோ, அரசு பணியோ கொடுக்கப்பட்டதா? ஆகவே கரூர் அசம்பாவிதத்திற்கு அரசு வேலை கொடுத்ததை நான் எதிர்ப்பேன்.

லஞ்சம் கேட்டா கொடுக்காதீர்கள் என்று சொல்லக்கூடியவர், லஞ்சம் வாங்கினால் அவரை டிஸ்மிஸ் செய்வேன் என்று சொல்ல முடியவில்லை.ஜல்ஜீவன்திட்டத்தில் குடிநீரை தருவதற்கு முன் வரும் மத்திய அரசு, நதிநீரை பெற்று தர ஏன் முன்வரவில்லை? இடைத்தேர்தல் எப்போது வைப்பார்கள் என்று காத்து இருக்கிறேன் வெறியோடு இருக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## இந்தோனேசியா: படகில் தீப்பற்றி எரிந்து விபத்து 5 பேர் பலி



ஜகார்தா, ஆக. 3

ஆசியாவில் அமைந்துள்ள நாடு இந்தோனேசியா. ஆயிரக்கணக்கான தீவுகளை கொண்ட இந்நாட்டில் படகு போக்குவரத்து அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், அந்நாட்டின் கிழக்கு ஜாவா மாகாணம் சுரபயா நகரில் இருந்து தெற்கு சுலவசி மாகாணம் மகசர் நகருக்கு இன்று படகு சென்றுகொண்டிருந்தது. அந்த படகில் 271 பயணிகள் பயணித்தனர்.

வடகிழக்குஜாவாவின்மதூராதீவுஅருகேசென்றபோதுபடகில்தீவிபத்து ஏற்பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த பயணிகள் பலரும் கடலில் குதித்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படகில் சிக்கியவர்கள், கடலில் குதித்தவர்கள் என மொத்தம் 225 பேரை உயிருடன் மீட்டனர். ஆனாலும், இந்த சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும், 41 பேர் கடலில் மூழ்கி மாயமாகினர். இதையடுத்து, கடலில் மூழ்கி மாயமானவர்களை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், படகில் தீப்பற்றியதற்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஓட்டலில் குண்டு வெடிப்பு 3 பேர் பலி



மாஸ்கோ, ஆக. 3

ரஷியாதலைநகர்மாஸ்கோவின்பரிகட்னயாநகரில்ஓட்டல்செயல்பட்டு வந்தது. இந்த ஓட்டலில் நேற்று இரவு வாடிக்கையாளர்கள் உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது, அந்த ஓட்டலுக்கு ஒரு பெண் வந்துள்ளார். அந்த பெண் வைத்திருந்த பையில் வெடிகுண்டு இருந்துள்ளது.

ஓட்டலில் இருந்த காவலாளி அந்த பையை சோதனை செய்துள்ளார். அப்போது அந்த வெடிகுண்டு வெடித்து சிதறியது. இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் அப்பெண், காவலாளி, ஓட்டலில் இருந்த வாடிக்கையாளர் என மொத்தம் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், 21 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ரஷியா: தற்கொலை வெடிகுண்டு தாக்குதலில் பெண் உள்பட 3 பேர் மரணம்

மாஸ்கோ ஆக. 3

ரஷியாவில் நடந்த தற்கொலை வெடிகுண்டு தாக்குதலில் பெண் உள்பட 3 பேர் மரணம் அடைந்தனர்.

ரஷியாவின் மாஸ்கோ நகரில் குத்ரின்ஸ்கயா சதுக்கம் பகுதியில் பால்ஜி ரோஸி என்ற பெயரில் உணவு விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. இதில், தனியார் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இதற்காக பலர் திரண்டு வந்திருந்தனர்.

அப்போது பெண் ஒருவர் அந்த உணவு விடுதிக்கு சென்றுள்ளார். சந்தேகத்தின்பேரில் அதன் பாதுகாவலர் அவரை தடுத்து நிறுத்தியுள்ளார். இந்த சமயத்தில், அந்த பெண் திடீரென உடலில் கட்டி வந்த வெடிகுண்டை வெடிக்க செய்துள்ளார்.

இந்த தற்கொலை வெடிகுண்டு தாக்குதலில் அந்த பெண், பாதுகாவலர் உள்பட 3 பேர் உயிரிழந்தனர். 21 பேர் படுகாயம் அடைந்தனர். இதனை அந்நாட்டின் உள்விவகார அமைச்சகமும் உறுதிப்படுத்தி உள்ளது.

இந்த தாக்குதலுக்கான காரணம் என்ன என்பது பற்றி உடனடியாக தெரிய வரவில்லை. தாக்குதலுக்கு சக்தி வாய்ந்த வெடிகுண்டு பயன்படுத்தப்பட்டு இருக்க கூடும் என போலீசார் தெரிவித்தனர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

## மதுரையில் 'விக்சஷித் பாரத் சங்கல்ப் அபியான்' போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி – 300 மாணவர்கள் உறுதிமொழி



மதுரை மாவட்டம் திருமங்கலம் அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் 'விக்சஷித் பாரத் சங்கல்ப் அபியான்–ஜென்சி போதை விழிப்புணர்வு நிகழ்ச்சி' கல்லூரி பல்நோக்கு கூட்டரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

நாட்டு நலப்பணித் திட்டத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளர் முனைவர் சாமுவேல் செல்லையா மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் மோ. பாண்டி ஆகியோரின் அறிவுறுத்தலின்படி நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக உரையாற்றினார்.

அவர்தனதுஉரையில், 2047ஆம்ஆண்டுக்குள்தன்னிறைவு பெற்ற வல்லரசு இந்தியாவை உருவாக்க இளைஞர்கள் பாடுபட வேண்டும்; போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க அனைவரும் உறுதியுடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாடுமுழுவதும்இந்தியதேசம்சார்பில்தேர்வுசெய்யப்பட்ட 125 பள்ளி மற்றும் கல்லூரிகளில் இந்நிகழ்ச்சி நடைபெற்ற நிலையில், மதுரை மாவட்டத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சார்பில் அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேர்வு செய்யப்பட்டு நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.

கல்லூரி தாளாளர் திரு ஷா, செயலாளர் திருமதி ஷகீலா ஷா, தலைமை நிர்வாக அதிகாரி திரு ஆதம் முகமது மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் சு. தபசு கண்ணன் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி நடைபெற்ற நிகழ்ச்சியில் சுமார் 300 மாணவர்கள் பங்கேற்று "போதை இல்லாத இந்தியாவை உருவாக்குவோம்" என்ற உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் மோ. பாண்டி மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் சு. தபசு கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு, போதைஒழிப்புதொடர்பானவிழிப்புணர்வு காணொளிகளை மாணவர்களுக்கு திரையிட்டு, போதையின் தீமைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் போ. முனியாண்டி மேற்கொண்டார். அவருடன் கணினி பொறியாளர் திரு உதயகதிரவன், பேராசிரியர்கள் பழனியம்மாள், ஆறுமுக ஜோதி மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் இணைந்து சிறப்பாக செயல்பட்டனர்.



திருவாரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பெ.விஸ்வநாதன் அவர்கள் ரூ.2 கோடியே 62 இலட்சத்து 84 ஆயிரம் மதிப்பிலான 12 புதிய கட்டடங்களை திறந்து வைத்தும் மற்றும் 565 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 51 இலட்சத்து 54 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பெ.விஸ்வநாதன் அவர்கள் வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வை.செல்வராஜ் அவர்கள், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.க.மாரிமுத்து அவர்கள், மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். காமராஜ் அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## புதுச்சேரி அக்னிவீர் ஆட்சேர்ப்பு முகாம் தொடக்கம்: தகுதி ஓட்டத்தில் மயங்கிய இளைஞர் உயிரிழப்பு



இந்திய ராணுவத்தின் சென்னை ஆட்சேர்ப்பு மண்டல தலைமையகம், புதுச்சேரி அரசின் ஒத்துழைப்புடன் அக்னிவீர் அனைத்து பிரிவு பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பு முகாமை உப்பளம் இந்திராகாந்தி விளையாட்டு மைதானத்தில் நேற்று அதிகாலை தொடங்கியது.

இந்த ஆட்சேர்ப்பு பணியில் 120க்கும் மேற்பட்ட ராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட தமிழகத்தின் 11 மாவட்டங்களையும், புதுச்சேரியையும் சேர்ந்த இளைஞர்கள் பங்கேற்க அழைக்கப்பட்டிருந்தனர்.

இதையடுத்து, பல்வேறு மாவட்டங்களில் இருந்து இளைஞர்கள் முன்தினமே புதுச்சேரி வந்தடைந்தனர். நேற்று அதிகாலை முதல் கல்விச்சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், ஆதார் உள்ளிட்ட ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. தொடர்ந்து அதிகாலை 2 மணிக்கு உடல் தகுதித் தேர்வு தொடங்கியது. முதற்கட்டமாக 1.6 கிலோமீட்டர் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டது. இதில் தகுதிபெற்றவர்களுக்கு 10 புல்அப், 9 அடி பள்ளம் தாண்டுதல், சமநிலை நடை மற்றும் உடல் அளவீட்டு தேர்வுகள் நடைபெற்றன. அனைத்து கட்டங்களிலும் தேர்ச்சி பெறுவோருக்கு ராணுவ மருத்துவக் குழுவினரால் உடல்நலம் மற்றும் கண்பார்வை பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

வரும் 10ஆம் தேதி வரை நடைபெறும் இந்த ஆட்சேர்ப்பு முகாமில் தினமும் சுமார் 1,000 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முதல் நாளான நேற்று 800க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர்.

பங்கேற்பாளர்களின் வசதிக்காக புதுச்சேரி மாவட்ட நிர்வாகம் சார்பில் குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும், வெளியூர்களில் இருந்து வருபவர்களுக்காக புதுச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து இலவச பேருந்து சேவையும் இயக்கப்பட்டது. பாதுகாப்பு பணியில் புதுச்சேரி போலீஸார் ஈடுபட்டனர். ஆட்சேர்ப்பு முகாமில் சோக சம்பவமும் அரங்கேறியது. திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அருகே கண்ணமங்கலம் பகுதியைச் சேர்ந்த கோகுல் (20) என்பவர் 1.6 கிலோமீட்டர் தகுதி ஓட்டத்தில் பங்கேற்றபோது திடீரென மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து ஒதியஞ்சாலை போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் ஆட்சேர்ப்பு முகாமில் பங்கேற்ற இளைஞர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# அழகப்பா கல்வி நிறுவனங்களின் வரலாற்றில் புதிய இலவச சமூக நல மருத்துவ முகாம்



காரைக்குடி, ஆக.3

அழகப்பா கல்வி நிறுவனங்களின் சார்பில் இலவச சமூக நல மருத்துவ முகாம் சிறப்பாகத் தொடங்கி வைக்கப்பட்டது. பொதுச் சேவையில் நீண்டகால பாரம்பரியத்தை கொண்டுள்ள அழகப்பா கல்வி நிறுவனங்களின் வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் முக்கிய நிகழ்வாக இம்முகாம் அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசின் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டி.கே. பிரபு, நீதியரசர் மு. சொக்கலிங்கம், மருத்துவர்கள், சுகாதார நிபுணர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் முகாம் தொடங்கிவைக்கப்பட்டது.

அழகப்பா கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் இராமநாதன் வைரவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# சிபிஎம் முன்னாள் ஒன்றிய செயலாளர் வி.கே.முருகன் மகன் வி.கே.எம்.ஸ்டாலின் உடல்நலக்குறைவால் மறைவு



சின்னாளபட்டி, ஆக03

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றிய சி.பி.எம். முன்னாள் செயலாளரும், முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத்தலைவரும், சிபிஎம் மாவட்ட குழு உறுப்பினருமான தோழர் வி.கே.முருகன் அவர்களின் மகன் வி.கே.எம்.ஸ்டாலின் உடல்நலக்குறைவால் மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். வி.கே.எம். ஸ்டாலின் மறைவு செய்தி கேட்டு சின்னாளபட்டி வடக்குத்தெருவில் உள்ள அவரது இல்லத்திற்கு திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், முன்னாள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் மற்றும் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் ஆர்.சச்சிதானந்தம் மறைந்த வி.கே.எம். ஸ்டாலின் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள். முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மலர் அஞ்சலி செலுத்தியபோது கண்கலங்கிய தோழர் வி.கே.முருகனுக்கு ஆறுதல் கூறிய முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மறைந்த வி.கே.எம். ஸ்டாலின் என்மீதும், கழகத்தின்மீதும் பற்று கொண்டவர். அவரது மறைவுச்செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அவரின் குடும்பத்தாருக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன் என்றார். திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், திமுக ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், சிபிஎம் ஒன்றிய செயலாளர்கள் கன்னிவாடி சக்திவேல், ஏ.சூசைமேரி, திமுக மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகந்நாதன், திரைப்பட நடிகர் ஆட்டோகிராப் அலெக்ஸ், நகர பேரவை நிர்வாகி கலைச்செல்வன், சின்னாளபட்டி பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, முன்னாள் பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் எம்.வி. முருகன், முன்னாள் பேரூர் கழக செயலாளர் மோகன்ராஜ், நகர காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த இராமலிங்கம், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் ஹேமா தம்பித்துரை, ராசு, ஜெயகிருஷ்ணன், பேரூர்கழக திமுக பொறுப்பாளர்கள் நாககண்ணன், தம்பித்துரை, கீர்த்தனா, தொழில் அதிபர் ஏ.டி.எஸ். மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூர் கழக திமுக நிர்வாகிகள் எஸ்.ஆர். முருகன், வடக்குத்தெரு சந்திரன், பூஞ்சோலை தங்கபாண்டியன், பிள்ளையார்நத்தம் திமுக நிர்வாகி அருண் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் மறைந்த வி.கே.எம். ஸ்டாலின் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

# ஆலங்குளம் பியர்ல் சிட்டி லயன்ஸ் கிளப் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா




ஆலங்குளம், ஆக. 3

ஆலங்குளம் பியர்ல் சிட்டி லயன்ஸ் கிளப் தலைவராக செல்லப்பா செல்வம், செயலாளராக புதுமை பாண்டிதுரை, பொருளாளராக நலரவீந்திரன் ஆகியோர் பதவியேற்றனர்.

ஆலங்குளம் பியர்ல் சிட்டி லயன்ஸ் கிளப் வட் டார தலைவராக எம்.சி.எஸ் நிதி நிறுவனம் நிர்வாக இயக்குநர் வி.டி. ஆறுமுக ராஜ், கிளப் நிர்வாகம் ஜெஸி ஆப்டிக்கல்ஸ் ஜெய சௌந்தர் ஆகியோர் பதவியேற்றனர்.

இவ்விழாவில் ஆலங்கு ளம் லயன்ஸ் கிளப் இன்ஸ் டாலேசன் தலைவருமான ஜான்ரவி, மண்டல தலைவரும், கண்தானம் விழிப்புணர்வு குழு தலைவருமான கே ஆர் பி இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். லயன் தங்கசெல்வம் தொகுத்து வழங்கினார்.

மாவட்ட முதல்நிலை ஆளுநர் டாக்டர் ஜான் சுபாஷ் பிறந்தநாள் கேக் வெட்டி கொண் டாடப்பட்டது. லயன் கிளப் நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்தனர். ஓய்வு ஆசிரியர் புலவர் சிவஞானம் வாழ்த்துரை வழங்கினார்.

இவ்விழாவில் ஆலங்குளம் லயன்ஸ் கிளப் மூத்த தலைவர் லயன் பாப்புலர் செல்லத்துரை. பியர்ல் சிட்டி லயன்ஸ் கிளப் முன்னாள் செயலாளர் வி.கே. குமார், துணை தலை வர்கள் பாஸ்கர், லெனின், தினகரன், மற்றும் டாக்டர். புஷ்பலதா ஜான், மற்றும் இயக்குநர்கள், பெர்பெக்ட் வின்னர் லயன்ஸ் கிளப் தலைவர் வில்லியம் தாமஸ், செயலாளர் லிவிங்ஸ்டன் விமல், பொருளாளர் ஜஸ்டின் ராஜ், ஆலங்குளம் லயன்ஸ் கிளப் தலைவர் செல்வக்குமார், செயலாளர் பிரேம்குமார், பொருளாளர் சரவணன்,

# தென்காசி மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள்: அமைச்சர்கள் வழங்கினர்



தென்காசி, ஆக. 3

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் வி.கே.ராஜீவ், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம்.ஷாஜஹான் ஆகியோர் முஸ்லீம் பெண்கள் உதவும் சங்கத்தின் சார்பில் 229 பயனாளிகளுக்கு ரூ.11,74 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

பின்னர் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம்.ஷாஜஹான் தெரிவிக்கையில்,

ஹஜ் பயணம் செய்பவர்களுக்கும், ஜெருசலேம் பயணம் செய்பவர்களுக்கும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 5000க்கும் மேற்பட்ட நபர்கள் புனித பயணம் செய்வதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 8000க்கும் மேற்பட்டோர் காத்திருப்பு பட்டியலில் உள்ளனர். அவர்களுக்கும் விரைவில் அனுமதி வழங்கப்படும். தேவாலயங்கள், பள்ளிவாசல்களுக்காக பல்வேறு திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. தேவாலயங்கள், பள்ளிவாசல்களில் கல்லறை தோட்டங்கள் அமைப்பதற்கு ரூ.35 கோடி நிதிகேட்டு இருக்கிறோம். ரூ. 16 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கூடியவிரைவில் மீதி நிதியும் கிடைப்பதற்கு வழி செய்து தரப்படும். உயர் கல்வி உதவித்தொகை, வெளிநாடு செல்வதற்கு உதவித் தொகை போன்ற பல்வேறு நலத்திட்டங்கள், செயல்படுத்தப்படுவது குறித்த விழிப்புணர்வை கிறித்தவ, இஸ்லாமிய மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம்.ஷாஜஹான் தெரிவித்தார்.

தொடர்ந்து, முஸ்லீம் பெண்கள் உதவும் சங்கத்தின் மூலம் 57 பயனாளிகளுக்கு ரூ.4,99,050/ மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களையும், 11 பயனாளிகளுக்கு 65,450/ மதிப்பிலான மாவு அரைக்கும் இயந்திரங்களையும், 07 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகையாக தலா ரூ.10,000/ வீதம் மொத்தம் 70,000/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், 54 பயனாளிகளுக்கு சிறு தொழில் உதவித் தொகையாக தலா ரூ.10,000/ வீதம் மொத்தம் ரூ.5,40,000/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 129 பயனாளிகளுக்கு ரூ.11,74,500/ இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.கே. ராஜீவ், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம்.ஷாஜஹான் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மா.வீராசாமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், நா.சண்முக சுந்தர், தண்டபாணி, பிரபல திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி ரமணி பரத்வாஜ், மாவட்ட முஸ்லீம் பெண்கள் உதவும் சங்க கௌரவ செயலாளர் முகம்மது ஸலீம், மாவட்ட முஸ்லீம் பெண்கள் உதவும் சங்க கௌரவ இணைச் செயலாளர் அப்துல் அஜீஸ் மற்றும் முஸ்லிம் பெண்கள் உதவும் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருநெல்வேலி மாவட்டம் மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்





திருநெல்வேலி, ஆக. 3

இராதாபுரம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் ஆனந்த் மோகன், தலைமையில், இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கே.கிறிஸ்டோபர் முன்னிலையில் மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மீனவ கிராமங்களில் வசிக்கும் மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு, மின்சார வசதி, போக்குவரத்து வசதி ஆகியவற்றை மேம்படுத்துதல், மீனவப் மகளிருக்கு மதிப்புக்கூட்டிய உபபொருட்கள் தயாரிக்கும் பயிற்சி வழங்க வேண்டுதல், கடலரிப்பினை தடுக்க தூண்டில் வளைவு அமைத்தல், உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல், மீனவ இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக விளையாட்டு மைதானங்கள் அமைத்தல் என பல்வேறு கோரிக்கைகளை மீனவப் பிரதிநிதிகள் மாவட்ட கலெக்டரிடம் தெரிவித்தனர்.

தொடர்ந்து, மாவட்ட கலெக்டர் ஆனந்த் மோகன், பேசுகையில்:

மீனவ மக்கள் தெரிவித்த கோரிக்கைகள் அனைத்தும் முறையாக பரிசீலிக்கப்பட்டு, தகுதியான மனுக்கள் மீது தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறிப்பாக தெருவிளக்குகள், குடிநீர்வசதி, அரசு பேருந்து, விளையாட்டு மைதானம் போன்றவற்றிற்கு முன்னுரிமை அளித்து பணிகள் மேற்கொள்ளப்படும். பெருமணல், தோமையார்புரம், கூடுதாழை ஆகிய கிராமப் பகுதிகளில் தூண்டில் வளைவு அமைப்பதற்கு கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்பதலுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல, இடிந்தகரை, கூத்தங்குழி, கூட்டப்பனை பகுதிகளில் தூண்டில் வளைவு அமைப்பதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிதி பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ஆயுஷ் குப்தா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் இளம்வழுதி, உட்பட அரசு அலுவலர்கள் மீனவப் பிரதிநிதிகள், மீனவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கலசலிங்கம் பல்கலைக்கழகம் 39-வது பட்டமளிப்பு விழா: 4835 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர்




ஸ்ரீவில்லிபுத்தூர், ஆக. 3

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலைக்கழக 39 வது பட்டமளிப்பு விழா இணைத்தலைவர் டாக்டர் எஸ். அறிவழகி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது.

துணைத் தலைவர் முனனைவர் எஸ். சசி ஆனந்த் துவக்கிவைத்தார் துணைத்தலைவர் முனைவர் எஸ். அர்ஜுன்கலசலிங்கம், துணைவேந்தர் முனவர் எஸ். நாராயணன், பதிவாளர் முனைவர் வி. வாசுதேவன், பல்கலை செயற்குழு யுஜிசி உறுப்பினர் பேராசிரியர் பி. கதிரேசன் முன்னிலை வகித்தனர். துணைவேந்தர் ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்தார். தலைமை விருந்தினர்

மத்திய தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சிஎஸ்ஐஆர் இயக்குநர் பேராசிரியர் டாக்டர்,வேணு கோபால் அசந்தா,தேர்வுகளில் தரவரிசைகள் பெற்ற 145 மாணவர்களுக்கு பதக்கம், சான்றிதழ்கள், பட்டங்களை வழங்கி உரையாற்றினார்.

“மாணவர்கள் பட்டம் பெற்ற படிப்பு துறையுடன் மற்ற துறையிலும் திறன் பெற்றால்தான் புதிய கண்டுபிடிப்பு ஆராய்சச்சியில் ஈடுபட முடியும் “என்றார். “உலக அளவில் இந்தியாவில்தான் அதிக இளைஞர்கள் 35 விழுக்காடு உள்ளனர். எனவே இளைஞர்களின் பங்கு உலக வளர்ச்சிக்கு தேவை “என்றார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக ராக்கெட் இந்தியா நிறுவன தொழில்நுட்பத் தலைவரும் துணைத் தலைவருமான திரு மோகன்பாபு பாலச்சந்திரன், கேப்ஜெமினியின் ஃஎஃப்எஸ் கோர் டெக்னாலஜிஸின் துணைத் தலைவரும் உலகளாவிய தலைவருமான திரு தினகர் செல்வின் ஆகியோர் உரையாற்றி பட்டங்களை வழங்கினர்.

பொறியியல், கட்டிடக்கலை, தோட்டக்கலை,

சட்டவியல்,நிர்வாகம், வேளாண்மை, சுகாதார அறிவியல் பிசியோதரபி, மற்றும் கலை மற்றும் அறிவியல் துறைகளில் 3785 இளங்கலை மாணவர்கள்

390 முதுகலை மாணவர்கள், பிஹெச்டி பட்டம் 107 மாணவர்கள், தொலைதூர மற்றும் இணையவழி கல்வி மையம் மூலமாக 653 பேர் உள்பட மொத்தம் 4835 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர்

பின்பு மாணவர்கள் தங்கள் அறிவை சமூகத்தின் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்துவதாக உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், இயக்குநர்கள், டீன்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர். பட்டமளிப்பு விழா குழு பேராசிரியர்கள்ர் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.

# போடியில் 15 ஆண்டுகளுக்கு மேலாக பூட்டப்பட்டு கிடந்த சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்: முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பார்வையிட்டு ஆய்வு




பெரியகுளம், ஆக. 3

தமிழக வெற்றி கழகத்தில் ஓ.பன்னீர்செல்வம் இணைவதாக தகவல் பரவிய நிலையில் திமுக நிர்வாகிகளுடன் அலுவலகத்தை பார்வையிட்டார்

தேனி மாவட்டம் போடி நாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு மூன்று முறை வெற்றி பெற்ற ஓ.பன்னீர்செல்வம் போடியில் உள்ள தனது இல்லத்தை சட்டமன்ற அலுவலகமாக அமைத்து செயல்பட்டு வந்த நிலையில்

இந்த முறை திமுக சார்பில் போடி சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்று நான்காவதாக போடி சட்டமன்ற உறுப்பினராக ஓ.பன்னீர்செல்வம் ஆன நிலையில், போடி சட்டமன்ற உறுப்பினருக்கு அரசால் ஒதுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை பராமரித்து அந்த அலுவலகத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

ஆன்லைன் சேவையுடன் கூடிய இ சேவை மையத்துடன் துவக்கப்பட உள்ள அலுவலக மராமத்து பணிகளை இன்று ஓ பன்னீர்செல்வம் திமுக நிர்வாகிகளுடன் ஆய்வு செய்தார்.

பின்னர் தமிழக வெற்றி கழகத்தில் தாங்கள் இணைய போவதாக நேற்று கிளம்பிய தகவல் குறித்து கேள்வி எழுப்பிய செய்தியாளர்களிடம் பதில் அளிக்க மறுத்து சென்றார்.

# தென்காசி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்: அமைச்சர் ராஜேஷ்குமார் ஆய்வு



தென்காசி, ஆக. 3

தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார், தென்காசி மாவட்டத்திற்கு ஒரு நாள் சுற்றுப்பயணமாக வந்து, மாவட்ட கலெக்டர் ரஞ்சித் சிங் உடன் இணைந்து சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மற்றும் சுற்றுலா தலங்களில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டு பணிகளை ஆய்வு செய்தார்.

முதலில் கீழப்பாவூர் பெரியகுளத்தில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்று வரும் மேம்பாட்டு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த அமைச்சர், பின்னர் குற்றாலம் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்கும், நீண்டகால தேவைகளை கருத்தில் கொண்டு தொலைநோக்கு திட்டங்களுடன் செயல் திட்ட அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்குமாறும் மாவட்ட ஆட்சியரிடம் அறிவுறுத்தினார்.

இதையடுத்து, நீர்வளத்துறை அதிகாரிகளிடம் பூங்கா சீரமைப்பிற்கான திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சியர் மூலம் உடனடியாக தயாரித்து அனுப்பி வைக்க அமைச்சர் ராஜேஷ்குமார் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வில் அரசு உயர் அதிகாரிகள், காங்கிரஸ் கட்சியின் மாவட்ட நிர்வாகிகள், தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் ஆடித் திருவாதிரை விழா முன்னேற்பாடு பணிகள்: கலெக்டர் ஆய்வு



அரியலூர், ஆக. 3

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னர்; இராஜேந்திர சோழன் பிறந்த நாளான ஆடித் திருவாதிரை விழா வருகின்ற 10.08.2026 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு விழா தொடர்பாக மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் ந.மிருணாளினி, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சு.செல்வகுமார், கலந்து கொண்டார்.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தை தலைமையிடமாக கொண்டு ஆட்சிபுரிந்த மாமன்னர்; இராஜேந்திர சோழன் அவர்கள் பிறந்த நாளான ஆடித் திருவாதிரை விழா அரசு விழாவாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் நடப்பாண்டிற்கான ஆடித் திருவாதிரை விழா 10.08.2026 அன்று கங்கைகொண்ட சோழபுரத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் இன்றையதினம் கங்கைகொண்ட சோழபுரத்தில் ஆடித் திருவாதிரை விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் ஆடித்திருவாதிரை விழாவில் கலந்துகொள்ளும் பக்தர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் வசதிக்காக குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள், பாதுகாப்பு வசதிகள், அரியலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் வந்து செல்வதற்கான சிறப்பு பேருந்து வசதிகள், மருத்துவ முகாம்கள், நடைபெற உள்ள கலை நிகழ்ச்சிகள் விபரம் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து அரசு அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

ஆடித்திருவாதிரை விழா தொடர்பான அனைத்து பணிகளையும் சிறப்பாக மேற்கொண்டு ஆடித் திருவாதிரை விழாவினை சிறப்புடன் நடைபெற சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தினார். மேலும், வரலாற்று சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரத்தில் 10.08.2026 அன்றையதினம் நடைபெறவுள்ள ஆடித்திருவாதிரை விழாவில் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் ந.மிருணாளினி, தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் மனோகரன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் மாவட்டத் தலைவர்களுக்கு பயிற்சி முகாம்



செஞ்சி ஆகஸ்ட் 3.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான ராகுல் காந்தி சனிக்கிழமை அன்று சென்னை அருகே மாமல்லபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டி மாவட்டத் தலைவர்களுக்கான பயிற்சி முகாமில் கலந்துகொண்டு கட்சியின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் கட்சியின் கட்டமைப்புகள் குறித்து விரிவாக ஆலோசித்து நிர்வாகிகளிடையே சிறப்புரையாற்றினார்.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் வழக்கறிஞர் ரங்க பூபதி மற்றும் ரங்க பூபதி கல்வி குழுமத்தின் இயக்குனரும் அவருடைய துணைவியாருமான சாந்தி பூபதி உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து கொண்டு காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தியுடன் வாழ்த்து பெற்று குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# கலெக்டர் தலைமையில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்து உறுதிமொழி ஏற்பு



மயிலாடுதுறை, ஆக. 3

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் கடற்கரையில், மாவட்ட அரசு இசைப்பள்ளி, சுற்றுலாத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இணைந்து நடத்தும் போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த கலைநிகழ்ச்சிகளை கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சினேகா ப்ரியா. முன்னிலை வகித்தார்கள்.

மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகத்தின் பரிந்துரையின் பேரில் பூம்புகார் கடற்கரையில், மாவட்ட அரசு இசைப்பள்ளி, சுற்றுலாத்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இணைந்து நடத்தும் போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த கலைநிகழ்ச்சிகளை மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்தார்.

போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த கலைநிகழ்ச்சிகளின் தொடக்கமாக, மாவட்ட அரசு இசைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் மங்கல இசையினை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து, நாட்டுப்புறக் கலைப் பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து, போதைபொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு கருத்துருவினை கொண்ட நாடகங்கள், பொம்மலாட்டம், நாட்டியம், கிராமிய இசை, பறை இசை உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளை காட்சிப் படுத்தினார்கள்.

முன்னதாக, மாவட்ட கலெக்டர் தலைமையில், அரசு அலுவலர்கள், இசை மற்றும் நடனக் கலைஞர்கள், பொதுமக்கள் அனைவரும் போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து, இந்த கலைநிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற அரசு இசைப்பள்ளி மாணவர்கள், நாட்டுப்புறக் கலைப் பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்கு பங்கேற்புச் சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பூங்கொடி, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் பாலமுருகன், மாவட்ட சுற்றுலா அலுவலர் முத்துச்சாமி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதுநிலை மண்டல மேலாளர் நாகராஜ், அரசு இசைப்பள்ளி தலைமை ஆசிரியர் சுமதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் கூடுதல் நடை இயக்க சேவை: அமைச்சர் தொடங்கி வைத்தார்



சேலம், ஆக. 3

சேலம் மாவட்டம், கொழிஞ்சிப்பட்டி, தாரமங்கலம், ஓமலூர், வாழப்பாடி பேருந்து நிலையங்களில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 4 நகரப்பேருந்துகள் வழித்தட நீட்டிப்பு மற்றும் 2 நகரப்பேருந்துகள் கூடுதல் நடை இயக்க சேவையினை போக்குவரத்துத் துறைஅமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன், மாவட்ட கலெக்டர் க.இளம்பகவத் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க சேலம் மாவட்டத்தில் ஓமலூரிருந்து பண்ணப்பட்டி பிரிவு, மாரக்கவுண்டன் புதூர், பெருமாள் கோவில் மேடு, சந்தைப்பேட்டை வழியாக வடகம்பட்டி இயக்கப்படும் நகரப் பேருந்தினை பெருமாள் கோவில் மேட்டிலிருந்து வெளவ்வால் தோப்பு வரை தடம் நீட்டிப்பு செய்தும், ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து .செட்டிப்பட்டி. ரெட்டிபட்டி பிரிவு, பெரியேரிப்பட்டி வேடப்பட்டி வழியாக தாரமங்கலம் செல்லும் நகரப்பேருந்தினை ரெட்டிபட்டி பிரிவில் இருந்து ரெட்டிப்பட்டி பொடாரி அம்மன் கோவில் வரை தடம் நீட்டிப்பு செய்தும், வாழப்பாடி பேளூர் வழியாக தாண்டானூர் செல்லும் நகரப்பேருந்தினை தாண்டானூரிலிருந்து இடையப்பட்டி வரை தடம் நீட்டிப்பு செய்தும், சேலம் நகரப்பேருந்து நிலையம் பேளூர் வரை இயக்கப்பட்ட பேருந்தை பேளூரிலிருந்து பெருமாபாளையம் வரை தடம் நீட்டிப்பு செய்தும் என 4 நகரப்பேருந்துகளின் வழித்தடம் நீட்டிப்பு சேவையினையும், சேலம் நகரப்பேருந்து நிலையத்தில் இருந்து சீலநாயக்கன்பட்டி பைபாஸ், நாழிக்கலிப்பட்டி வழியாக கொழிஞ்சிப்பட்டிக்கு இயங்கும் பேருந்தினை கூடுதலாக இரண்டு நடைகளும், மேட்டூர் பேருந்து நிலையத்தில் இருந்து மேட்டூர் . விருதாசம்பட்டி, 4 குட்டப்பட்டி. தொளசம்பட்டி, அமரகுந்தி வழியாக தாரமங்கலத்திற்கு கூடுதலாக ஒரு நடையும் என 2 பேருந்துகளின் கூடுதல் நடை இயக்க சேவையினையும் போக்குவரத்துத் துறை அமைச்சர் தொடங்கிவைத்தார்கள்.

இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர்கள் மே.ச. பழனிவேல் (வீரபாண்டி), திரு.கா.சிவகுமார் (சேலம் வடக்கு), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் அ.கிருஷ்ணமூர்த்தி, பொது மேலாளர் (சேலம்) வ.சிவக்குமார், பொது மேலாளர் (தொழில் நுட்பம்) ந.கலைவாணன், துணை மேலாளர் (கூட்டாண்மை வணிகம்) அருள்முருகன் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழகத்துக்கான காவிரி உரிமையை காங்கிரஸ் கட்சிதான் பறிக்கிறது: பா.ஜ.க மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பேச்சு




தஞ்சாவூர், ஆக.3

கர்நாடகத்தில் காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணைக் கட்ட முயற்சிக்கும் மற்றும் தமிழகத்துக்கு உரிய தண்ணீரை தர மறுக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசைக் கண்டித்து தஞ்சாவூரில் பா.ஜ.க சார்பில் கண்டன பேரணி ஆர்ப்பாட்டம் பா.ஜ.க மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பேரணியானது மாநகராட்சி அலுவலகம் அருகில் இருந்து புறப்பட்டு பனகல் கட்டிடம் வரை நடைபெற்றது. பின்னர் அங்கு ஆர்ப்பாட்டம் நடந்தது.தஞ்சை தெற்கு மாவட்ட பா.ஜ.க தலைவர் ஜெய்சதீஷ் வரவேற்றார். மாவட்ட பார்வையாளர் முரளிகணேஷ், மாநில செயற்குழு உறுப்பினர்கள் கர்ணன், உமாபதி, ராமநாதன், வெங்கடேஷ், பெரியநாயகி, மாவட்ட பொதுசெயலாளர் வீரசிங்கம், சிறுபான்மை பிரிவு பொதுசெயலாளர் நெப்போலியன், ஓபிசி அணி பொதுசெயலாளர் கதிரவன், விவசாய அணி பொதுசெயலாளர் ராமலிங்கம், மாவட்ட பொருளாளர் மணிகண்டன், விவசாய அணி மாவட்ட தலைவர் தங்கவேல், மாவட்ட தலைவர்கள் ஒண்டி முத்து,ராமச்சந்திரன், முத்தமிழ் செல்வன்,செல்வம், ஜெகதீசன், பரமேஸ்வரி, விஜயேந்திரன், நாஞ்சில் பாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் தேசிய செயலாளர் அரவிந்த்மேனன், முன்னாள் மாநில தலைவர் பொன். ராதாகிருஷ்ணன், மாநில பொதுச்செயலாளர் கருப்பு முருகானந்தம் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் மாநில தலைவர் நயினா நாகேந்திரன் பேசியதாவது :காவிரி நதி நீர் ஒப்பந்தம் கடந்த 1974 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அன்றைக்கு இந்திரா காந்தி மிரட்டியதன் விளைவாக அப்போதைய முதல்வர் கருணாநிதி செய்த தவறால் புதுப்பிக்கப்படவில்லை. கச்சத்தீவை விட்டுக் கொடுத்தது காங்கிரஸ் கட்சி. தற்போது காவிரி உரிமையைப் பறிப்பதும் காங்கிரஸ் கட்சிதான்.

தமிழக காங்கிரஸ் தலைவர் எக்ஸ் தளத்தில் ஏதேதோ பதிவுகள் போட்டு, ஏளனமாகப் பேசுகிறார். ஆனால், கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சி இருக்கும் நிலையில், அவர் சென்று கேட்கலாமே? அவர் ஏன் கர்நாடக மாநிலத்துக்கு செல்லவில்லை.

கர்நாடகத்தில் எப்போதெல்லாம் காங்கிரஸ் ஆளுங்கட்சியாக இருக்கிறதோ, அப்போதெல்லாம் தமிழ்நாட்டுக்கு பிரச்னை வந்து கொண்டே இருக்கிறது. தமிழ்நாட்டுக்கு 4.5 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வே ண்டும் என காவிரி ஆணையம் கூறியது. ஆனால், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் என்றைக்குமே தானாக வந்து தண்ணீரைத் திறந்துவிட்டதில்லை. நமக்கு எப்போதுமே உபரி நீர்தான் வருகிறது. தற்போது அங்கு மழை பெய்வதால், 10 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதை கர்நாடக முதல்வர் முன்பே செய்திருக்கலாமே? இது குறித்து தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூரும், தமிழக முதல்வர் ஜோசப் விஜய்யும் கேட்டிருக்கலாமல்லவா?

தமிழக முதல்வரைத் தனியாக வருமாறும், பேசிக் கொள்ளலாம் எனவும் கூறிய கர்நாடக முதல்வர் சிவகுமார் தற்போது வராதே எனக் கூறுகிறார். முதலில் வா என அழைத்துவிட்டு, வராதே என்பது தமிழன் என்ற முறையில் ஜோசப் விஜய்க்காக வருத்தப்படுகிறேன். இதற்காக கர்நாடக முதல்வர் சிவக்குமாரை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பா.ஜ.க தொண்டர்கள் ஒவ்வொருவரும் இனிமேல் விழிப்புடன் இருந்து, கட்சியைப் பலப்படுத்த வேண்டும். வரும் காலங்களில் உள்ளாட்சித் தேர்தலாக இருந்தாலும், இடைத்தேர்தலாக இருந்தாலும் அனைத்து இடங்களிலும் நாம்தான் போட்டியிடுவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் மாவட்ட துணை தலைவர்கள் வினாயகம், பஞ்சாட்சரம், நமசு.ராஜா, துரை, அம்ரித்அரசன், ரஜினிகணேசன், வளர்மதி, வடக்கு மாவட்ட ஆன்மீகம் மற்றும் ஆலய மேம்பாட்டு பிரிவு தலைவர் சக்கரசாமந்தம் இளங்கோவன் நாட்டார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் வடக்கு மாவட்ட அமைப்பாளர் பூண்டி வெங்கடேசன் நன்றி கூறினார்.

# கொல்லிமலையில் வல்வில் ஓரி விழா, சுற்றுலா விழா மற்றும் மலர்கண்காட்சி விழா: எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



நாமக்கல், ஆக. 3

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில்ஓரி அவர்கள் வில்வித்தையில் சிறந்து விளங்கி கொல்லிமலையை ஆண்ட மன்னராவார். இவர் தானத்தில் சிறந்து விளங்கியதால் கடையேழு வள்ளல்களில் ஒருவராக பொதுமக்களாலும், வரலாற்று அறிஞர்களால் போற்றப்படுகிறார்.

இவரது புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் கொல்லிமலையில் வல்வில்ஓரி விழா தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது. அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டும் கொல்லிமலை செம்மேடு வல்வில்ஓரி அரங்கில், வல்வில்ஓரி விழா மற்றும் சுற்றுலா விழாவும், கொல்லிமலை வாசலூர்பட்டி தாவரவியல் பூங்காவில் மலர்க் கண்காட்சி தொடக்க விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொ.சந்திரசேகர், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் வே.சாந்தி தலைமையில், வல்வில்ஓரி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை மணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

முன்னதாக, கொல்லிமலை செம்மேட்டிலிருந்து 4 கி.மீ தூரத்தில் உள்ள தாவரவியல் பூங்காவில் தோட்டக்கலை துறை மூலம் அமைக்கப்பட்டிருந்த மலர் கண்காட்சியினை திறந்து வைத்து பார்வையிட்டார். இக்கண் காட்சியில் குழந்தைகளை கவரும் வகையில் ரோஜா, கார்னேசன், ஜெர்பிரா, லில்லியம், ஆர்கிட் போன்ற பலவகையான வண்ண மலர்களை கொண்டு ஆடு, கோழி, கன்றுகுட்டி, வண்ணத்துப்பூச்சி, நாட்டிய பெண்கள், முயல், பிறை நிலா மற்றும் காதல் சின்னம் ஆகிய உருவங்கள் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டு இருந்தன. இதற்காக 60 ஆயிரம் மலர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து, சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.பொ.சந்திரசேகர் அவர்கள், சுற்றுலாத்துறையின் சார்பில் நடைபெற்ற மங்கள இசை நிகழ்ச்சி கிராமிய நடனம், பல்சுவை நடனங்கள், உயர்கல்வித்துறையின் சார்பில் 4 கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சி மற்றும் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 18 அரசு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற நாட்டுப்புற பாடல், கைபேசி விழிப்புணர்வு பாடல், சிலம்பாட்டம், நடனம், கிராமிய நடனம்பக்தி பாடல் மற்றும் நாட்டுப்புற கிராமிய இசைக்கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். தொடர்ந்து, இந்த ஆண்டு வாசலூர்பட்டி தாவரவியல் பூங்காவில் சுற்றுலா பல்லுயிர் கண்காட்சி நடைபெற்றது. இதில் பொனி குதிரை, மலைநாடு கிட்ட, புங்கனூர் மாடு இனங்கள், அசாம் பிக்னி கோட்டு, சண்டை கிடா ஆடு இனங்கள், பக், கிரேட் டேன், டேக்சன்ட், மால்டிஸ், ஜாக் ரஷ்ஷல், சிச்சு, பீகல் நாய் இனங்கள், கிமா லைன் பர்சியன், ரஷ்யன் ப்ளூ பூனைகள், நியூசிலாந்து ஒயிட், ரெட் ஜெயன்ட் முயல் இனங்கள், மணிலா வாத்து, பிஞ்சஸ், டைல் மார்க், ரோமர், ஆஸ்திரேலியன் புறா, முஸ்கி, பந்தய புறா, பென்குயின் புறா, தாமிர ஆடா புறா இனங்கள், சைனா வெள்ளை, கடக்நாத், பேந்தம் கோழி இனங்கள் மேலும், பேன்சி பறவை, லெமன் காக்டெயில், சன் கண்ணூர், ஆஸ்திரேலியன் காக்டெயில், பச்சிகரா, ஆப்பிரிக்கன் லவ் பேர்ட்ஸ், காக்டெயில் விலங்குகள் மற்றும் பறவை இனங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. கொல்லிமலையில் 14 நாடுகள் இருந்தது. தற்போது இந்த 14 நாடுகளும் 14 ஊராட்சிகளாக உள்ளது. மலையின் கிழக்கு பக்கத்தில் கொல்லிப்பாவை என்ற தெய்வீகப்பதுமை இருந்தது

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுலா அலுவலர் கா.காமில் அன்சர், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி எம்.புவனேஸ்வரி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கிருஷ்ண வேணி, கொல்லிமலை வட்டாட்சியர் கோபி, கொல்லிமலை வட்டார வளர்ச்சி அலுவலர் ஈஸ்வரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு. சதீஸ்குமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# உத்தனப்பள்ளி அருகே விவசாயி தூக்கிட்டு தற்கொலை



கிருஷ்ணகிரி, ஆக.2

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அடுத்த சூளகிரி தாலுக்கா உத்தனப்பள்ளி அருகே உள்ள தேவசானப்பள்ளி கிராமத்தை சேர்ந்த விவசாயி ராமச்சந்திரன் (39) என் பவருக்கு அஞ் சலி(3) என்பவருடன் திருமணமாகி இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளநிலையில் ராமச்சந்திரன் ஒசூர் மாநகராட்சி, தேன்கனிக்கோட்டை சாலையில் இயங்கி வரும் வெரிடாஸ் பைனான்ஸ் என்னும் நிதி நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தனது விவசாய நிலத்தின் மீது 14 இலட்சம் ரூபாய் பணத்தை கடனாக வாங்கி உள்ளார்..

ஒன்றரை ஆண்டுகளாக மாதந்தோறும் தவணை சரியாக பணம் செலுத்தி வந்ததாகவும், கடந்த 4 மாதங்களாக சரியான தேதியில் கட்டமுடியாமல் தாமதமாக கட்டி வந்ததாக சொல்லப்படுகிறது.இந்த மாதம் பணம் கட்டவில்லை எனக்கூறி ஜூலை 29,30 ஆகிய இரண்டு நாட்களில் வெரிடாஸ் நிதி நிறுவன ஊழியர்கள் அதிகாலை முதல் இரவு வரை வீட்டின் முன்பாக அமர்ந்து வந்ததை பலரும் ராமச்சந்திரனிடம் கேட்டதாக தெரிகிறது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் தவணை தொகையை செலுத்திய ராமச்சந்திரன் மன உளைச்சலிலேயே இருந்ததாகவும், மனைவியிடம் நான் இல்லை என்றாலும் பிள்ளைகளை பார்த்துக்கொள் என உருக்கமாக பேசி, தூங்குவதற்காக அறை கதவைமூடிக்கொண் தூக்கிட்டு தற்கொலை செய்துக்கொண்டார்

இதன் பேரில் உத்தனப்பள்ளி போலீசார் விசாரனை செய்து வருகின்றனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

03.08.2026

# தருமபுரி மாவட்டத்தில் ஆடிப்பெருக்கு விழா முன்னேற்பாடு பணிகள்: கலெக்டர் ஆய்வு



தருமபுரி, ஆக. 3

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ப.ராஜ்குமார் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழாவை தொடங்கி வைக்க வருகைதர உள்ளதையொட்டி நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் வே.சரவணன், ஆய்வு மேற்கொண்டார்கள்.

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் ஆண்டு தோறும் நடைபெறும் ஆடிப்பெருக்கு விழாவை முன்னிட்டு, மாவட்ட நிர்வாகம் சார்பில் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆடிப்பெருக்கு விழா அன்று சுற்றுலா பயணிகளும் அதிக அளவில் வருகை தருவார்கள். எனவே, பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார ஏற்பாடுகள் செய்தல், தடையில்லா மின்சாரம் வழங்குதல், தற்காலிக கழிப்பிட வசதிகள் ஏற்பாடு செய்தல், பொதுமக்கள் எளிதாக வந்து செல்ல தருமபுரி மற்றும் பென்னாகரத்திலிருந்து ஒகேனக்கலுக்குக் கூடுதல் போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்தவும், அசம்பாவிதங்களைத் தடுக்க தீயணைப்பு வீரர்கள் மற்றும் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தவும், ஆடிப் பெருக்கு விழாவின்போது சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் மருத்துவ முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்திடவும், சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழக அரசின் பல்வேறு துறைகள் சார்பில் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த கண்காட்சி அரங்குகள் அமைத்திடவும், விழா நடைபெறும் 02.08.2026, 03.08.2026, 04.08.2026 ஆகிய 3 நாட்களிலும் சுற்றுலாத் துறை மற்றும் கலைப் பண்பாட்டுத் துறை, பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை இணைந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்திட மாவட்ட கலெக்டர் வே.சரவணன், அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

# திருமருகல் குறுவட்ட அளவிலான கபடி போட்டியில் திருக்கண்ணபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் முதலிடம்



தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெறும் திருமருகல் குறுவட்ட அளவிலான மாணவர்களுக்கான கபடி போட்டிகள்நாகைமாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் 14 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் திருக்கண்ணபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் முதலிடம் பிடித்து நாகை மாவட்ட அளவிலான கபடி விளையாட்டு போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் 19 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான கபடி போட்டியில் இரண்டாம் இடம் பெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளி தலைமை ஆசிரியர் குமார் உதவி தலைமை ஆசிரியர் சுகுமாரன் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. பள்ளி மேலாண்மை குழு தலைவர் கவிதா பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் அன்பானந்தம் பள்ளி வளர்ச்சி குழு தலைவர் தியாகராஜன் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களையும் உடற்கல்வி ஆசிரியர்கள் சௌரிராஜன், லெனின் ஆகியோரையும் பாராட்டினர்.

# சேலம் ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு விழா!







சேலம், ஆக. 3

சேலம், ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் ஹோலி கிராஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்லோகேஷ்தமிழ்செல்வன்.சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆர்.எஸ்.ராமசாமி, மெட்ரோபோல் ஹோம்ஸ் நிறுவனத்தின் தலைவர், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் முன்னாள் கௌரவச் செயலாளர் மற்றும் ஹோலிகிராஸ் அருட்சகோதரர்கள் சபையின்,புனித ஆண்ட்ரே புராவின்ஸின் தலைவர் அருட்சகோதரர் சந்தோஷ் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

ஹோலிகிராஸ் பள்ளியின் முதல்வரும், தாளாளருமான அருட்சகோதரர் முன்று பாலசாமி மற்றும் பள்ளியின் நிர்வாகி அருட்சகோதரர் பாஸ்கர் ஆரோக்கியசாமி ,துணை முதல்வர் அருட்சகோதரர் மாசிலாமணி ஹோலிகிராஸ் இன்டர் நேஷனல் (CBSF) பள்ளியின் முதல்வர் அருட்சகோதரர் ஸ்டீபன் ஆனந்தராஜ், துணைமுதல்வர் அருட்சகோதரர் ஞானசேகரன்,மேல்நிலைப் பள்ளியின் துணைமுதல்வர் அந்துவான் குணசீலன் ஆகியோர் தலைமையில் விழாவானது வெகு சிறப்பாக நடைபெற்றது.

பள்ளியின் மாணவத்தலைவர் சாய் ராம். வரவேற்புரை வழங்க, அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவர்களின் கூட்டு உடற்பயிற்சி, வண்ணமிகு கலை நிகழ்ச்சிகள் மற்றும் பெற்றோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், தொடர் ஓட்டப்பந்தயம், சீர் உடற்பயிற்சி நிகழ்ச்சிகள் எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கியதுடன் சிறப்புரையாற்றி மாணவர்களை ஊக்கப்படுத்தினர் சிறப்பு விருந்தினர் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை விளையாட்டுத்துறை ஆசிரியர்கள், பிற ஆசிரியர்கள், விழாக்குழுவினர், அலுவலகப்பணியாளர்கள்மற்றும்உடன்உழைப்பாளார்கள் யாவரும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (03.08.2026)

**மேஷம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். மூத்த அதிகாரிகளின் ஆதரவும் வழிகாட்டுதலும் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

**ரிஷபம்:** தொழிலில் இருந்த சிக்கல்கள் விலகும். வங்கி கடன் முயற்சி செய்துகொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். மற்றவர்களை அளவுக்கு அதிகமாக நம்புவதைத் தவிர்க்கவும்

**மிதுனம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.வாகனப்பயணங்களிலும் பணப் பரிவர்த்தனைகளிலும் அதிக கவனம் தேவை.

**கடகம்:** சந்திராஷ்டம நிறைவு என்பதால் பிற்பகலுக்கு மேல் நிம்மதி கூடும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். கூட்டுத் தொழில் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும்

**சிம்மம்:** தொழில் சார்ந்த விஷயங்களில் நிதானம் தேவை. அவசரப்பட்டு பெரிய முதலீடுகளைச் செய்ய வேண்டாம். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல கவனம் மற்றும் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி:** ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உருவாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

**துலாம்:** புதிய திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். காதலிப்பவர்களுக்கு இடையே புரிந்துணர்வு கூடும். பணிபுரியும் இடத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். எடுத்த காரியங்களில் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும்.

**தனுசு:** பணவரவு சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் சுப பேச்சுகள் சுமுகமாக முடியும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மையளிக்கும்.

**மகரம்:** சந்திரனின் சாதகமான நகர்வால் மன அமைதி கூடும். எதிர்பார்த்த உதவிகளும் பரிசுகளும் கிடைக்கும். ஆன்மீகக் காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்:** தேவையற்ற விரயச் செலவுகள் வரக்கூடும் என்பதால் சிக்கனம் தேவை. வெளிநாடு அல்லது வெளியூர் தொடர்பான செய்திகள் சாதகமாக வரும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**மீனம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். நிலுவையில் இருந்த பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

# குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு

திருப்பூர், ஆக. 3


குறு,சிறு மற்றும் நடுத் தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன் ராஜா தலைமையில் மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே மற்றும் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பால முருகன் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, அனுப்பர்பாளையம்புதூர் மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் மாவட்ட தொழில் மையம், சிட்கோ தொழிற்பேட்டை, , , தாய்கோ வங்கி ஆகிய அலுவலகங்களின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குறு,சிறு மற்றும் நடுத் தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன் ராஜா தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு 2036க்குள் தமிழ்நாட்டில் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைய குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் பங்களிப்பு 30 சதவீதமாக உயர்த்த துறை வாரியாக நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், குறு, சிறு தொழிற்சாலைகளின் நிலைக் கட்டணம் குறித்த கோரிக்கைகள் உரிய தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மூலப்பொருட்களின் விலை ஏற்ற இறக்கம் உலகளாவிய காரணிகளால் ஏற்படுவது இருப்பினும், சிட்கோ, தொழிற்பேட்டை வளாகங்களை முழுமை யாகப் பயன்படுத்துவதற் கும், தொழில் முனை வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த் தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன் ராஜா தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட தொழில் மையம் சார்பில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மற்றும் தமிழ்நாடு மகளிர் தொழில் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சரக்கு வாகனம், பயணிகள் வாடகை வாகனம், புகைப்படம் நிலையம், சாயமேற்றுதல், ஹாலோ பிளாக் தயாரிப்பு, மற்றும் உற்பத்தி, அரசிகடை, காகிதத்தட்டுகள் தயாரிப்பு என மொத்தம் 12 பயனாளிகளுக்கு ரூ.1.49 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.45.81 இலட்சம் அரசு மானியத்தில் கடனுவிக்கான மானிய விடுப்பு மற்றும் ஒப்பளிப்பு ஆணைகளை குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன் ராஜா வழங்கினார்கள்.

# நீண்ட நாள் காதலியை கரம்பிடித்த ‘ஸ்பைடர் மேன்’ பட நடிகர்



மார்வெல் சினிமேட்டிக் யூனிவர்ஸ்(எம்.சி.யு.) வரிசையில் வரும் ‘ஸ்பைடர் மேன்’ திரைப்படங்களில், பீட்டர் பார்க்கரின் நண்பன் நெட் லீட்ஸ் கதாபாத்திரத்தில் நடித்து பிரபலமடைந்தவர் ஜேகப் பேட்டலான். சமீபத்தில் வெளியான ‘ஸ்பைடர் மேன் பிராண்ட் நியூ டே’ திரைப்படத்தில் இவரது நடிப்பு ரசிகர்களை கவர்ந்துள்ளது.

முன்னதாக ‘ஸ்பைடர் மேன்’ படத்தின் புரமோஷன் பணிகளுக்காக அந்த படத்தின் நடிகர், நடிகைகள் பல்வேறு செய்தியாளர் சந்திப்புகளை நடத்தினர்.அப்போதுஒருபேட்டியில்,ஜேகப்பேட்டலான்நகைச்சுவையாக, ‘எனது மனைவி என்னை பெரிய நாய்க்குட்டி என்று கூப்பிடுவார்’ என்றார். 29 வயதான நடிகர் ஜேகப் பேட்டலானுக்கு இதுவரை திருமணம் ஆகவில்லை என்று ரசிகர்கள் நினைத்து வந்த நிலையில், அவர் தனது மனைவி குறித்து பேசியது நெட்டிசன்களின் ஆர்வத்தை தூண்டிவிட்டது.

இதையடுத்து இணையதளவாசிகள் ஜேகப் பேட்டலானின் திருமணம் குறித்த தகவல்களை தேடிக் கண்டறிந்து சமூக வலைதளங்களில் வெளியிட்டு விட்டனர். அவர் இத்தனை நாட்கள் ரகசியமாக வைத்திருந்த தனது திருமணம் குறித்த தகவல், அவரது வாயாலேயே வெளியே வந்துவிட்டது.

முன்னதாக கடந்த 2025ம் ஆண்டு ஜேக்கப் பேட்டலானுக்கும், வெரோனிக்கா லீஹோவ் என்ற பெண்ணுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியிருந்தது. ஆனால் அதன் பிறகு அவர்களது திருமணம் பற்றிய எந்த தகவலும் வெளியாகவில்லை. இந்நிலையில், தற்போது வெளியாகியிருக்கும் தகவலின்படி, ஜேக்கப்வெரோனிக்கா ஜோடிக்கு சில மாதங்களுக்கு முன்பு பிரான்சில் திருமணம் நடைபெற்றதாக தெரியவந்துள்ளது.

இவர்கள் இருவரும் 2019ம் ஆண்டு முதல் காதலித்து வந்துள்ளனர். மால்டோவா நாட்டை சேர்ந்த வெரோனிக்கா, அமெரிக்காவில்குடியேறிதற்போதுஇண்டீரியர்டிசைனராகபணியாற்றிவருகிறார்.திருமணம்குறித்ததகவல்வெளியான பிறகு, தற்போது இந்த ஜோடியின் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

இதே போல், ‘ஸ்பைடர் மேன்’ படத்தில் பீட்டர் பார்க்கர்மேரி ஜேன் கதாபாத்திரத்தில் நடித்துள்ள டாம் ஹாலண்ட் ஜெண்டாயா ஜோடியும் நீண்ட நாட்களாக காதலித்து வருகின்றனர். இவர்களுக்கும் இதே போல் ரகசியமாக திருமணம் முடிந்துவிட்டதாக இணையத்தில் தகவல் பரவி வருகிறது. ஆனால் திருமணம் குறித்து இருவரும் இதுவரை வெளிப்படையாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் 3 நாட்களில் ரூ.216 கோடி வசூல் ஈட்டிய “ஸ்பைடர்மேன்” திரைப்படம்

நடிகர் டாம் ஹாலண்ட் நடித்துள்ள ‘ஸ்பைடர்மேன்: பிராண்ட் நியூ டே’ திரைப்படம் இந்தியாவில் மட்டுமே இதுவரை ரூ.216 கோடி வசூலித்துள்ளது.

கொலம்பியா பிக்சர்ஸ் தயாரிப்பில், இயக்குநர் டெஸ்டின் டேனியல் கிரிட்டோன் இயக்கத்தில் உருவாகியுள்ள ‘ஸ்பைடர்மேன்: பிராண்ட் நியூ டே’ திரைப்படம் கடந்த ஜூலை 31ம் தேதி உலகம் முழுவதும் பிரமாண்டமாக வெளியானது. இதில் டாம் ஹாலண்ட் கதாநாயகனாகவும், ஜெண்டாயா கதாநாயகியாகவும் நடித்துள்ளனர். கடந்த 2021ம் ஆண்டு வெளியான ‘ஸ்பைடர்மேன்: நோ வே ஹோம்’ திரைப்படத்திற்குப் பிறகு சுமார் ஐந்து ஆண்டுகள் இடைவெளியில் இந்தப் படம் வெளியாகியுள்ளது.

மார்வெல்லின்38வதுதிரைப்படமாகவும்‘ஸ்பைடர்மேன்’திரைப்படவரிசையில்நான்காவதுபடமாகவெளியாகியுள்ள இந்த திரைப்படத்தை காண குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஆர்வத்துடன் திரையரங்குகளுக்கு சென்று வருகின்றனர். புதிய எதிரிகள், விறுவிறுப்பான அதிரடி காட்சிகள் மற்றும் பிரம்மாண்டமான காட்சியமைப்புகளால் உலகம் முழுவதும் இந்தப் படம் ரசிகர்களின் வரவேற்பைப் பெற்று வருகிறது.

வெளியாகிய முதல் நாளிலேயே ‘ஸ்பைடர்மேன்: பிராண்ட் நியூ டே’ திரைப்படம் இந்தியாவில் சுமார் ரூ.72 கோடி மொத்த வசூலைக் குவித்து புதிய சாதனை படைத்துள்ளது. இதன்மூலம், இதுவரை இந்தியாவில் ஹாலிவுட் திரைப்படங்களில் அதிக முதல் நாள் வசூல் என்ற சாதனையை வைத்திருந்த ‘அவெஞ்சர்ஸ்: எண்ட்கேம்’ திரைப்படத்தின் சாதனையை முறியடித்துள்ளது.

# தேவி ஸ்ரீ பிரசாத் பிறந்தநாள் சிறப்பு போஸ்டர் வெளியிட்ட வாழ்த்திய “எல்லம்மா” படக்குழு

தேவி ஸ்ரீ பிரசாத் பிறந்த நாளை முன்னிட்டு, ‘எல்லம்மா’ படக்குழு சிறப்பு போஸ்டரை வெளியிட்டு வாழ்த்தியுள்ளது. தெலுங்கு, தமிழ் திரையுலகில் முன்னணி இசையமைப்பாளராக வலம் வருபவர் தேவி ஸ்ரீ பிரசாத். இவர் தமிழில் சிங்கம், மன்மதன் அம்பு, வெடி, சாமி ஸ்கொயர், சச்சின், ஆறு, சிங்கம், புலி, வில்லு, வீரம், கங்குவா என ஏராளமான படங்களுக்கு இசையமைத்துள்ளார். இவரது இசையில் வெளிவந்த புஷ்பா திரைப்படம் பிளாக்பஸ்டர் ஹிட்டானது. அப்படத்தின் வெற்றிக்கு இவரது பாடல்களும் முக்கிய காரணம். இயக்குநர் வேணு எலிடாண்டி இயக்கத்தில் உருவாகும் ‘எல்லம்மா’ படத்தில் கதாநாயனாக தேவி ஸ்ரீ பிரசாத் அறிமுகமாகிறார். இப்படத்தை தெலுங்கில் வரவேற்பை பெற்ற ‘பலகாம்’ என்ற படத்தை இயக்கிய வேணு எல்டண்டாடி இயக்குகிறார். ‘எல்லம்மா’ திரைப்படத்தின் கிளிம்ஸ் வீடியோவை படக்குழுவினர்சமீபத்தில் வெளியிட்டிருந்தனர். மேலும், தேவி ஸ்ரீ பிரசாத்தின் இசையில் இப்படம் உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படத்தை ஸ்ரீவெங்கடேஷ்வரா கிரியேஷன்ஸ் சார்பில் தில் ராஜு, சிரிஷ் தயாரிக்கின்றனர். இதில் பார்சி என்ற கதாபாத்திரத்தில் தேவி ஸ்ரீ பிரசாத் நடிக்கிறார். இப்படம் தெலுங்கு, தமிழ் உள்பட 5 மொழிகளில் உருவாகிறது. இதில் சாய் பல்லவி, மிருணாள் தாக்குர் அல்லது கீர்த்தி சுரேஷ் ஆகிய மூவரில் ஒருவர் கதாநாயகியாக நடிப்பார்கள் என்று முதலில் கூறப்பட்டது. இந்நிலையில், தேவி ஸ்ரீ பிரசாத் பிறந்த நாளை முன்னிட்டு, ‘எல்லம்மா’ படக்குழு சிறப்பு போஸ்டரை வெளியிட்டு வாழ்த்தியுள்ளது.

# சென்னை அணியின் முகாமில் இணையும் ருதுராஜ் கெய்க்வாட்?




இந்திய பேட்ஸ்மேன் ருதுராஜ் கெய்க்வாட், துலீப் டிராபி 2026 தொடரில்தனது பொறுப்புகளைநிறைவு செய்த பிறகு, சென்னைசூப்பர் கிங்ஸ் அணியின் உடற்தகுதி முகாமில் இணைய வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ருதுராஜ் தற்போது துலீப் டிராபி தொடரில் கவனம் செலுத்தி வரும் நிலையில், அந்த தொடர் முடிந்தவுடன் முகாமில் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முகாமில் வீரர்களின் உடற்தகுதி, பயிற்சி முக்கியமாக இடம்பெறும்.

கடந்த சீசனில் காயம் காரணமாக சில போட்டிகளை தவறவிட்ட ருதுராஜ், தற்போது முழு உடற்தகுதியை எட்டும் முயற்சியில் உள்ளார்.

# வெஸ்ட் இண்டீஸ் பாகிஸ்தான் ஆட்டம் மழையால் பாதிப்பு




பாகிஸ்தான்கிரிக்கெட்அணிவெஸ்ட்இண்டீஸ்சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தானை 90 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெஸ்ட் இண்டீஸ் அபார வெற்றிபெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் இன்று தொடங்கியுள்ளது. கரீபியனில் உள்ள டிரினிடாட் அண்ட் டொபாகோ நாட்டின் தலைநகர் போர்ட்ஆப்ஸ்பெயின்நகரில்உள்ளமைதானத்தில்இப்போட்டி நடைபெறுகிறது.

இப்போட்டியில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் முதலில் பேட்டிங் தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் 1 விக்கெட் இழப்பிற்கு 49 ரன்கள் எடுத்திருந்தபோது ஆட்டத்தில் மழை குறுக்கிட்டது. இதனால், ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. வெஸ்ட் இண்டீஸ் அணியின் பிரண்டன் கிங் 33 ரன்களுடனும், கவிம் ஹட்ஜ் ரன் எதுவும் எடுக்காமலும் களத்தில் உள்ளனர்.

# சிறப்பாக செய்லபட இவர்கள் தான் காரணம்: புவனேஷ்வர் குமார்




இந்திய அணியின் அனுபவம் மிக்க வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார், இந்திய அணி வேகப்பந்துவீச்சில் சிறப்பாக செய்லபட முன்னாள் கேப்டன் விராட் கோலி மற்றும் முன்னாள் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோரின் தொலைநோக்கு பார்வையே முக்கிய காரணம் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கு முன், உள்நாட்டிலேயே வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களில் விளையாட வைத்தனர். அதுவே அவர்களின் தொலைநோக்கு பார்வையை காட்டியது. இந்தியாவின் வேகப்பந்து தாக்குதலை உருவாக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இதுபோன்ற சிறிய முடிவுகள்தான் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும், என்று புவனேஷ்வர் குமார் கூறினார்.

கோலி–சாஸ்திரி தலைமையிலான காலகட்டத்தில் இந்திய அணி ஆஸ்திரேலியா, இங்கிலாந்து உள்ளிட்ட வெளிநாட்டு மண்ணில் பல மறக்க முடியாத டெஸ்ட் வெற்றிகளைப் பெற்றது. அந்த வெற்றிகளுக்கு வலுவான வேகப்பந்து தாக்குதலை உருவாக்கிய திட்டமிடலே அடித்தளமாக இருந்ததாக புவனேஷ்வர் குமார் பாராட்டியுள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.